அய்மான் நகர்

13

<u>திருவையாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)யின் செயல்முறைகள்</u>
<u>பிறப்பிப்பவர் திரு.S.ஜான்கென்னடி, B.Sc.B.Ed.,</u>

ந.க.எண்.810/2021/ஆ1 நாள்.03.12.2021

பொருள்	அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறை செய்தல் - திருவையாறு ஊராட்சி ஒன்றியம் - இராயம்பேட்டை ஊராட்சி - கிராம நி.அ.எண்கள்.141/3,4,233/2Apt-ல் 45316.44ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்க் கொள்கையளவில் ஒப்புதல் வரப்பெற்றது - வரன்முறைசெய்து ஆணையிடல்.
பார்வை	1. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசாணை எண்.78, நாள் - 04.05.2017, 2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசாணை எண்.172, நாள் - 13.10.2017, 3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13193/2017/LA2 நாள்.30.10.2017,31.10.2017,07.11.2017,17.11.2017 மற்றும் 20.12.2017 4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசாணை எண்.21, நாள் - 05.02.2019 5. தஞ்சாவூர் நகர ஊரமைப்பு துணை இயக்கநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்-597/2021தமா4 நாள்-09.03.2021 மற்றும் 07.10.2021 5. விண்ணப்பதாரர் A.முருகன் என்பவரது விண்ணப்பம் நாள்.24.03.2021 6.வட்டாட்சியர், திருவையாறு கடித மூ.மூஎண்.4027/2021/அ1 நாள்.13.11.2021 7.இவ்வலுவலக கடித ந.க.எண்.810/2021/ஆ1நாள்.20.11.2021

<u>ஆணை</u>

தஞ்சாவூர் நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்-597/2021/ தமா4 நாள்-07.10.2021ன்படி கீழ்காணும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கொ.ஒ.ம.வ/ந.ஊ.து.இ (தம) எண்-34/2021

திருவையாறு ஒன்றியம் இராயம்பேட்டை ஊராட்சியில் நி.அ.எண்கள்- 141/3,4,233/2Apt-ல் 45316.44ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் கீழ்காணும் விற்கப்படாத மனை எண்கள்- 1முதல்4, 9முதல்15, 18முதல்21, 22முதல்25 மற்றும் 28 ஆகிய 20 மனைகள் அரசாணை எண்-78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வசதி துறை நாள்-04.05.2017 மற்றும் அரசாணை எண்-172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வசதி துறை நாள்-13.10.2017-ன்படியும், அரசாணை எண்.21, நாள்

-

05.02.2019 ன் படியும் தஞ்சாவூர் நகர ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்-597/2021தமா4 நாள்-07.10.2021ன் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் மனைப்பிரிவு வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

கட்டணம் செலுத்தப்பட்ட விபரம்

வ எண்.	கட்டண விபரம்	மனைகளின் எண்ணிக்கை/ சதுர மீட்டர்	கட்டண தொகை(ரூ)	தொகை செலுத்தப்பட்ட விபரம்
1	கூராய்வுக் கட்டணம் (மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம்)	மனை எண்கள்-1,முதல்4, 9முதல் 25 ,28ஆகிய மனைகளுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது	22x500=11000	Registration Slip.DTCP/L/086379/2017 date:03.02.2021
2	வரன்முறைக் கட்டணம் (சதுர மீட்டருக்கு ரூ.45/- வீதம்)	மனைஎண்கள்.1முதல்4,9முதல்15, 18முதல்21 ,22முதல்25,,28ஆகிய விற்கப்படாத 20 மனைகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது.	113319/-	வங்கி/ கிளை - பாரத மாநில வங்கி, ,வ.ஊ.சி.கிளை, தஞ்சாவூர் நாள் -22.11.2021 கணக்கு எண் - 0217 -Urban Development 60-Other Urban Development 800 Other Receipt AT Receipt Under Regularization charges of Unapproved Layouts and plots-DTCP27 Non Taxation fees-30 Regularisation/ (DPC:0217-60-800-AT2730)
3	வளர்ச்சிக் கட்டணம் (சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம்)	மனைஎண்கள்.1முதல்4,9முதல்15,18முதல்21, 22முதல்25,28 ஆகிய விற்கப்படாத 20 மனைகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது.	62955/-	வங்கி கணக்கு விபரம் - மாவட்ட ஆட்சியர்,தஞ்சாவூர் வங்கி/ கிளை - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் / Specialised SME – Thanjavur Branch Date-22/11/2021 கணக்கு எண் - 378401000000322 IFSC Code - IOBA0003784

வரன்முறைபடுத்தப்பட்ட விற்பனை செய்யப்படாத மனை விபரங்கள்	
மனை எண்கள்	மனைஎண்கள்.1முதல்4,9முதல்15, 18முதல்21 ,22முதல்25,,28ஆகிய விற்கப்படாத 20 மனைகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் நிலகையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்த்திருத்தச் சட்ட'களின் கீழ் பிற்காலத்தில் கவரப்பட்டால் நில உரிமையளரே முழு பொறுப்பாவார்.

செயல்முறை வழங்கி செய்து

15

2. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மற்றும் வரன்முறை மூலம் மனைப்பிரிவில் அமைந்துள்ள முன்னரே விற்பனை செய்யப்பட்ட 1 தனி மனை வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவற்றை வரன்முறைப்படுத்த தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

விற்பனை செய்யப்பட்ட மனைகள் - 5முதல்8,22A,26,27ஆகிய 7 மனைகள்

3. அரசாணை எண்.78 விதி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் இடங்களில் மனைப்பிரிவு அமையப்பெற்றதாக பின்னர் கண்டறியப்பட்டால் மனைப்பிரிவின் அங்கீகாரம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.

அ. பொது குடிநீர் ஆதாரங்களான வாய்க்கால், குளம், ஏரி மற்றும் ஆறுகளில் அமையும் எந்த ஒரு மனை அல்லது முழு மனைப்பிரிவு.

ஆ. அரசு புறம்போக்கு நிலங்களில் அமையப்பெற்ற எந்த ஒரு மனை அல்லது முழு மனைப்பிரிவு.

இ. அ'கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள திறந்த வெளி ஒதுக்கீடு, பூங்கா மற்றும் விளையாட்டு மைதானத்தில் அமையும் எந்த ஒரு மனை அல்லது முழு மனைப்பிரிவு.

ஈ. மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள பகுதிக்கு பொது வழித்தடங்கள் இல்லாத இடத்தில் அமையும் எந்த ஒரு மனை அல்லது முழு மனைப்பிரிவு.

உ. சாலை அல்லது ரயில் பாதை மற்றும் தெரு விஸ்தரிப்பு பணிகளுக்காக கண்டறியப்பட்டுள்ள வளர்ச்சி திட்ட பணிகளில் அமையும் எந்த ஒரு மனை

ஊ. பொது சாலை அல்லது தெரு அல்லது வேறு ஏதேனும் நிலங்களை ஆக்கிரமித்து உரிமை கொண்டாடும் நிலங்கள், தமிழ்நாடு நகர்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1978-ல் அமையும் எந்த ஒரு மனை அல்லது முழு மனைப்பிரிவு.

எ. உயர் மின்னழுத்த கோபுரங்கள் அல்லது உயர் மின்னழுத்த கம்பிகள் செல்லும் பாதையில் அமையும் எந்த ஒரு மனை அல்லது முழு மனைப்பிரிவு.

4. தமிழ்நாடு ஊராட்சி சட்ட விதிகளின் படி மனை வரன்முறை செய்வதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. விண்ணப்பதாரர் கோரியவாறு மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின்மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதனை தீர்த்துக்கொள்ள ஊராட்சியானது பொருத்தமான அமைப்பு அல்ல.

5. தற்பொழுது அனுமதியளிக்கப்பட்ட மனை வரைபடத்தில் எவ்விதமாற்றமும் செய்யக்கூடாது.

6. அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் அரசாணைகள், அறிவிக்கைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

7. மேற்காணும் விதிமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை என்று ஆய்விலோ அல்லது பின்னரோ தெரியவந்தால் இவ்வனுமதி ரத்து செய்யபடுவதுடன் மனுதாரர்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க ஏதுவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்	பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	45316.44சதுர அடி	---
மொத்த மனைகள்	29	
ஒதுக்கீடு மனைகள்	27	---
வரன்முறைப்படுத்தப்பட்ட மனைகள்	20	
பூங்கா	3040 சதுர அடி	10.08%

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
திருவையாறு

3/1/2/7

பெறுநர்-
திரு.A.முருகன், 6A கிருஷ்ணன் தெரு, அரியலூர் தாலூக்கா
நகல் - மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
நகல் - மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் - 1. தொடர்புடைய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியம், திருவையாறு.
2. ஊராட்சி செயலர், இராயம்பேட்டை ஊராட்சி.
(ஊராட்சி பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்வதற்கு)
நகல் - ஆ1- மனை வரன்முறை அனுமதி ஆணைகளுக்கான இருப்புக்கோப்பு

Application

மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர்,
தஞ்சாவூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.S.தனராசு,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: **597/2021** தமா2 நாள்: **.09.2021**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் - திருவையாறு வட்டம் மற்றும் ஊராட்சி ராயம்பேட்டை ஊராட்சி (ம) கிராமம் நி.அ.எண்கள். **141/3,4,233/2Apt**-ல் 45316.44ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2நாள்: 30.10.2017, 31.10.17, 07.11.17,17.11.17 மற்றும் 20.12.17
4. அரசாணை எண்: 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 05.02.2019
5. அரசாணை எண்: 100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 01.07.2019
6. மனுதாரர் திரு.A.முருகன் அவர்களின் கடிதம் நாள்: 11.02.2021
7. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 09.03.2021
8. வட்டார வளர்ச்சி அலுவலர், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம் ந.க.எண்:**2108/2017**/ஆ1 நாள்: 01.09.2021

உத்தரவு:-

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (6)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு அதன் தொடர்நடவடிக்கையாக பார்வை (5)ல் கண்ட அரசாணையின் படி சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு வரைபடம் தயார் செய்யப்பட்டு, பார்வை (7)ல் கண்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (8)ல் கண்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர், திருவையாறு ஊராட்சி ஒன்றியம் , அவர்களின் கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா பகுதி ஏற்பு செய்து அதன் விபரம் பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து, கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் மற்றும் ஊராட்சி, ராயம்பேட்டை ஊராட்சி (ம) கிராமம் நி.அ.எண்கள். **141/3,4,233/2Apt**-ல் 45316.44ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.இ.(த.மா)எண்: 34/2021** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 45316.44 ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 07

விற்கப்பட்ட மனை எண்கள்: 5-8,22A,26,27

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 20

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 1-4,9-15,18-21,22-25,28

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 30146.50ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 3040.00ச.அடி (10.08 %)

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

1) பரிசீலணைக் கட்டணம்:

இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்குரூ.500/- வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம்	**Registration Slip No. DTCP/L/0806379/2017**-ல் மனை எண்கள்: **1-4,9-25,28**-ற்கு மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

பரிசீலணைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் அரசு வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்: (உதாரணமாக)

கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரன்முறை கோரி 04.11.2018 முதல் பெறப்படும் விண்ணப்பத்திற்கு பார்வை (4)ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு வரன்முறைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

மனை எண்	பரப்பளவு (ச.மீ)	வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ருபாய் 30/- வீதம்) (ருபாயில்)	வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ருபாய் 25/-வீதம்) (ருபாயில்)
09	**104.24**	**104.24 X 30 = ரு. 3128 /-**	**104.24 X 25 = ரு.2606/-**

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

0217 Urban Development **60 Other Urban Development Schemes** **800 Other Receipts** **AT Receipts under Regularisation Charges of Unapproved Layouts and Plots –DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation** **(DPC: 0217 60 800 AT 2730)**	சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம்.

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழக்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விபரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

.3.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை (நிலை)எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல எனஅறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

7/X/21

உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

<u>இணைப்பு:</u>
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

<u>பெறுநர்:</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருவையாறு ஊராட்சி ஒன்றியம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

<u>நகல்:</u>

1. திரு.A.முருகன்,
6A, கிருஷ்ணன் தெரு,
அரியலூர் தாலுக்கா ,
அரியலூர் மாவட்டம்.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
மாவட்ட ஆட்சியரகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
3. உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
4. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருவையாறு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

(3, 4) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)

5. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருவையாறு,
தஞ்சாவூர் மாவட்டம்.

(5) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)

6. தொழில்நுட்ப வைப்பறை — ஒரு வரைபட தொகுப்பு